**இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகம்- 2010**

-----------------------------------------------------------------

**1. நிதிசார் கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கங்ளைத் தவிர, நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க, இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவகத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் தொழிற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் தயாரிக்கப்பட்டிருந்தன என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**1.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 நிதிசார் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு**

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின்படி, நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களிற்குள் கணக்காய்விற்காக சமரப்பிக்க வேண்டியிருந்த 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 04 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.2.2 சிறந்த கணக்கீட்டு நடைமுறைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறந்த கணக்கீட்டு நடைமுயைின்படி, வருமானச் செலவுக் கணக்கு மற்றும் ஐந்தொகை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக பிரயோகிக்கப்பட்ட பெறுமானத் தேய்வுக் கொள்கைகள், இருப்பு மதிப்பீட்டு அடிப்படை மற்றும் ஏதாவது வேறு நியமங்கள் அல்லது கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) குத்தகை ஆதனத்தின் மீள்மதிப்பீடு மற்றும் அத்தகைய சொத்துக்களிற்காக பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டு நடைமுறை என்பன தொடர்பில் எவ்வித வெளிபபடுத்தல்களும் செய்யப்பட்டிருக்கவிலலை.

(ஈ) இருப்புக்கள் கிரயத்தில் கணிப்பிடப்பட வேண்டியிருந்தும் விற்பனை விலையில் கணிப்பிடப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வில் பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டிட நிதியக் கணக்கில் கணக்கிடப்பட வேண்டியிருந்த ரூபா 21,240 தொகையான கட்டிட நிதியத்திற்காக உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட நன்கொடைகள் நன்கொடை வருமானமாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 17,500 தொகையான வாழ்த்து அட்டைகளின் அட்டுறு அச்சிடல் கிரயம் அட்டுறு செலவினமாக கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(இ) அறக்கட்டளை நிதியம் தொடர்பான ரூபா 320,000 ஆன தொகை கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 583,392 கூட்டுமொத்த தொகையான இறுதி இருப்புக்கள், இரண்டு வங்கி மீதிகள், சில்லறைக் காசு கட்டுநிதி, மற்றும் கொடுப்பனவுகள் என்பனவற்றை கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், பதிவேடுகள், மெய்மையாய்வு அறிக்கைகள், இன்வொய்ஸ்கள், பற்றுச்சீட்டுக்கள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் என்பன போன்ற ஆவணங்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக கட்டளைச் சட்டம் | |
| (i) 9(2)(அ) ஆம் பிரிவு | ஒரு உறுப்பினர் தொடர்சிசியாக 05 கூட்டங்களிற்கு சமூகமளித்திருக்கவில்லை. மேலும், இன்னொரு சபை உறுப்பினர் 2010 ஆம் ஆண்டின் போது ஒரு சபைக் கூட்டத்திற்குக் கூட சமூகமளித்திருக்கவில்லை. |
| (ii) 28 ஆம் பிரிவு | நிறுவகத்தின் ஆரம்ப மூலதனம் ரூபா 150,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 110,000 மாத்திரமே நிதியத்தில் காட்டப்பட்டிருந்தது. |
| (iii) பட்டோலை (ஏ)(5)(2) | 23 உறுப்பினர்கள் 2 ஆண்டு காலத்திற்கு உறுப்புரிமைக் கட்டணத்தை செலுத்தியிருக்காத போதிலும் அந்த உறுப்பினர்களின் பெயர்கள் உறுப்புரிமைப் பதிவேட்டிலிருந்து அகற்றப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் அதிகாரச்சட்டம் | மீளாய்வாண்டின் போது ஊழியர்களின் சம்பளத்திலிருந்து மாதாந்த உதவு தொகைகள் கழிக்கப் பட்டிருக்காததுடன் நிறுவகத்தின் பங்குடன் உரிய அதிகாரிகளிற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | நிதிப்பிரமாணங்கள் இல 261(3) மற்றும் இல 446(2) | காசேட்டுப் புத்தக மீதிகள் நாளாந்தம் மற்றும் மாதாந்த அடிப்படையில் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை |
| (உ) | 2003 யூன் 2 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் அத்தியாயம் | நிறுவகத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |

## 2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்காக நிறுவகத்தின் செயற்பாடுகள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 166,284 ஆன நேரொத்த தேறிய மிகையுடன் ஒப்பிடும் போது ரூபா 848,898 ஆன தேறிய மிகையை விளைவித்திருந்தது, ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 682,614 ஆன அதிகரிப்பைக் காட்டுகிறது.இறுதி இருப்புக்கள், கருத்தரங்கு வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி என்பவற்றின் அதிகரிப்பு இந்த அதிகரிப்பிற்கான காரணங்களாக இருந்தன.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 மார்ச் 02 இல் நடைபெற்ற சபை கூட்டத்தின்படி, உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்தின் வரைவு செயற்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், இந்த கட்டிட நிர்மாணம் தொடர்பில் எவ்வித முன்னேற்றத்தையும் கூட அவதானிக்க முடியாதிருந்தது.

(ஆ) 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பந்தியின்படி, நிறுவகம் உறுப்புரிமைக் கட்டணத்தை விதிப்பனவு செய்கிறது. தற்போதைய விலை மட்டங்களைக் கருத்திற் கொண்டு வீதங்களை திருத்துவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 செப்டெம்பர் 29 இல் நடைபெற்ற சபை கூட்டத்தின்படி, இணையதள மாஸ்ரர் உதவியுடன் நிறுவகத்தினுடைய இணைய தளத்ததை நாளதுவரையாக்கல் பிரேரணை 2010 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அறக்கட்டளை நிதியம் தொடர்பான ரூபா 320,000 ஆன தொகை முதலீடு செய்யப்படாமல் நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2010 சனவரி 19 இல் நடைபெற்ற சபைக் கூட்டத்தின்படி, உறுப்பினர்களிற்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இதுசம்பந்தமாக 2010 ஆம் ஆண்டின்போது எவ்வித முன்னேற்றமும் அவதானிக்கப்படவில்லை.

(ஊ) 2010 சனவரி 19 மற்றும் 2010 ஆகஸ்ட் 30 இல் நடைபெற்ற சபைக் கூட்டங்களின்படி, உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அவர்களுடைய விண்ணப்படிவத்திலுள்ள விபரங்களை பயன்படுத்தி 2010 செப்டெம்பர் மாத இறுதிக்கு முன்னர் உறுப்புரிமை தகவல்கோவை பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பாரக்கப்பட்டது. ஆனால் இது இன்னமும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2010 ஆம் அண்டின் போது உறுப்பினர்களிற்கான நான்கு கூட்டங்கள் "கோரம்" இன்மை காரணமாக இரத்துசெய்யப்பட்டிருந்தது.

## 2.3 கணக்குப் பதிவேடுகளின் பேணுகை

2010 ஆம் ஆண்டிற்கான நிறுவகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

## 2.4 செயலாற்றல் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1975 இன் 33 ஆம் இலக்க இலங்கை மதிப்பீட்டாளர் நிறுவக கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி, மீளாய்வாண்டிற்காக பின்வரும் குறிக்கோள்கள் அடையப்பட்டிருக்கவில்லை.

(i) நூலகங்கள் தாபித்தல் மற்றும் பேணுவதன் மூலம் சுவீகரிப்பு, பரப்புதல் மற்றும் மதிப்பாய்வு விஞ்ஞானம் தொடர்புபட்ட அறிவைப் பராமரிக்கொள்வதற்கும் அல்லது தொடர்புபடவும் முன்னேற்றுதல்.

(ii) நிறுவகத்தின் உறுப்புரிமைக்கான தகமைப் பரீட்சையை நடாத்துதல் அல்லது வழங்கல், மற்றும் அத்தகைய பரீட்சைகளிற்கான கற்கை பாடநெறியை வழங்குதல் அல்லது அனுமதித்தல் மற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் பரீட்சையாளர்கள் சேர்த்தல் மற்றும் வேதனமளித்தல்.

(iii) புலமைப்பரிசில்கள், கண்காட்சி உதவு தொகைகள் மற்றும் பதக்கங்கள் மற்றும் வேறு பரிசுகள் வழங்கல்.

(iv) இலங்கை மதிப்பீட்டு செயன்முறையில் உள்ளோரின் நன்மைகள் அல்லது முன்னெற்றத்திற்கு அவசியமான தரவு வங்கியின் தாபிப்பு மற்றும் பேணுகை உள்ளடங்கலாக அத்தகைய அளவீடுகளை எடுத்தல்.

(ஆ) நிறுவகமானது 2010 ஆம் ஆண்டிற்காக 3 கருத்தரங்குகளை மாத்திரம் நடாத்தியிருந்தது. கருத்தரங்குகளிற்காள உறுப்பினரின் வருகை குறைந்த மட்டத்திலேயே இருந்தன.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசெட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உறுப்புரிமைக் கட்டணங்கள்
(இ) நிதி முகாமைத்துவம்
(ஈ) வருமானம்
(உ) கருத்தரங்குகள் நடாத்துதல்